கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததற்கிணங்க

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு!

தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 14.5.2026 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற **"தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்" அறிவித்ததற்கிணங்க;**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து **"கள ஆய்வு" செய்வதற்காக 36 பேர் கொண்ட குழு அமைக்கப்படுகிறது**. இக்குழுவானது, தொகுதிவாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு மாவட்டச் செயலாளர்கள் - வேட்பாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்களை நேரடியாகச் சந்தித்து கருத்துகளையும் - அவர்களின் பரிந்துரைகளையும் பெற்று **கள ஆய்வு அறிக்கையை ஜூன் 5ஆம் தேதிக்குள் கழகத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்கும்.**

கள ஆய்வுக்குழுவினரின் வருகையின் போது மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேவையான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் செய்து தர வேண்டும். தொகுதியின் விவரம், வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகள் விவரம், அதிக வாக்குகள் பெற்ற பகுதி, குறைவான வாக்குகள் பெற்ற பகுதி உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் மாவட்டச் செயலாளர்கள் தயாராக வைத்திருந்து குழுவினருக்கு அளிக்க வேண்டும்.

ஆய்வின் போது குழுவினர், மாவட்டச் செயலாளர் - தொகுதிப் பார்வையாளர் - வேட்பாளர் - தொகுதிக்குட்பட்ட செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்களைத் தனித்தனியாக சந்தித்துப பேசுவர். அதோடு மாநகர, ஒன்றிய, நகர , பகுதி , பேரூர் செயலாளர்களையும் தனித் தனியே சந்திப்பர். இச்சந்திப்பின் போது மாவட்டச் செயலாளர், தொகுதிப் பார்வையாளர், வேட்பாளர் உள்ளிட்டவர்கள் உடன் இருக்கக் கூடாது.

அதேபோல, ஒவ்வொரு மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்க் கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித்தனி குழுக்களாகச் சந்தித்து கருத்துக் கேட்க உள்ளனர். அப்பொழுது மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் உடன் இருக்கக் கூடாது.

ஆய்வுக்குழுவின் வருகை தொடர்பாக கழக நிர்வாகிகளுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டு, அதற்குரிய முறையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். காலை முதல் மதியத்திற்குள் இந்த சந்திப்பினை நிறைவு செய்து விட்டு மதியத்திற்கு மேல் சார்பு அணிகளைச் சேர்ந்த மாநில - மாவட்ட நிர்வாகிகளை தனித்தனி குழுக்களாக சந்திக்க வேண்டும். அதே போல கிளைச் செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளையும் குழுக்களாக சந்தித்து ஆய்வு செய்ய உள்ளனர்.

ஆய்வுக் கூட்டம் நடைபெறும் நாளில் கூட்டத்தில் கலந்து கொள்ளும் கழக நிர்வாகிகளின் வருகைப் பதிவேடு முறையாக பதிவு செய்ய வேண்டும். மினிட் புத்தகத்திலும் பதிவு செய்து கையொப்பம் பெற வேண்டும்.

கழக மாவட்டம்	தொகுதிகள்	குழு
ஈரோடு தெற்கு	ஈரோடு (கிழக்கு)	சி.வி.எம்.பி.எழிலரசன் மன்னை த.சோழராஜன்
	ஈரோடு (மேற்கு)	
	மொடக்குறிச்சி	
ஈரோடு மத்திய	பவானி	
	பெருந்துறை	
ஈரோடு வடக்கு	அந்தியூர்	
	கோபி செட்டிபாளையம்	
	பவானிசாகர்	
நாமக்கல் கிழக்கு	இராசிபுரம்	
	சேந்தமங்கலம்	
	நாமக்கல்	
நாமக்கல் மேற்கு	குமாரபாளையம்	
	திருச்செங்கோடு	
	பரமத்திவேலூர்	
கடலூர் கிழக்கு	கடலூர்	பூச்சி எஸ். முருகன் ஜெகன் பெரியசாமி
	காட்டுமன்னார்கோயில்	
	குறிஞ்சிப்பாடி	
	சிதம்பரம்	
	புவனகிரி	
நாகப்பட்டினம்	கீழ்வேளூர்	
	நாகப்பட்டினம்	
	வேதாரண்யம்	
மயிலாடுதுறை	சீர்காழி	
	பூம்புகார்	
	மயிலாடுதுறை	
சேலம் கிழக்கு	ஆத்தூர்	வழக்கறிஞர் ஏ.சரவணன் நா.இளையராஜா
	ஏற்காடு	
	கெங்கவல்லி	
	வீரபாண்டி	
சேலம் மத்திய	ஓமலூர்	
	சேலம் (தெற்கு)	
	சேலம் (மேற்கு)	
	சேலம் (வடக்கு)	
சேலம் மேற்கு	எடப்பாடி	
	சங்ககிரி	
	மேட்டூர்	
இராமநாதபுரம்	இராமநாதபுரம்	ச.முரசொலி, எம்.பி சேலம் உமாராணி
	திருவாடானை	
	பரமக்குடி	
	முதுகுளத்தூர்	
தூத்துக்குடி தெற்கு	ஓட்டப்பிடாரம்	
	திருச்செந்தூர்	
	ஸ்ரீவைகுண்டம்	
தூத்துக்குடி வடக்கு	கோவில்பட்டி	
	தூத்துக்குடி	
	விளாத்திகுளம்	
தென்காசி தெற்கு	கடையநல்லூர்	
	தென்காசி	
தென்காசி வடக்கு	சங்கரன்கோவில்	
	வாசுதேவநல்லூர்	
சென்னை வடகிழக்கு	திருவொற்றியூர்	எம்.எம்.அப்துல்லா ரேகா பிரியதர்ஷினி
	மாதவரம்	
சென்னை வடக்கு	டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்	
	பெரம்பூர்	
	இராயபுரம்	
திருவள்ளூர் கிழக்கு	கும்மிடிப்பூண்டி	
	பொன்னேரி	
திருவள்ளூர் மத்திய	ஆவடி	
	பூந்தமல்லி	
திருவள்ளூர் மேற்கு	திருத்தணி	
	திருவள்ளூர்	
சென்னை கிழக்கு	எழும்பூர்	எஸ்.கே.பி. கருணா கே.ஈ.பிரகாஷ், எம்.பி.,
	கொளத்தூர்	
	அம்பத்தூர்	
	துறைமுகம்	
	திரு.வி.க நகர்	
	வில்லிவாக்கம்	
சென்னை தெற்கு	சைதாப்பேட்டை	
	சோழிங்கநல்லூர்	
	மதுரவாயல்	
	விருகம்பாக்கம்	
	வேளச்சேரி	
சென்னை மேற்கு	அண்ணா நகர்	
	ஆயிரம் விளக்கு	
	சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி	
கிருஷ்ணகிரி கிழக்கு	ஊத்தங்கரை	சி.என்.அண்ணாதுரை, எம்.பி திருமதி ரத்னா லோகேஸ்வரன்
	கிருஷ்ணகிரி	
	பர்கூர்	
கிருஷ்ணகிரி மேற்கு	ஓசூர்	
	தளி	
	வேப்பனஹள்ளி	
தர்மபுரி கிழக்கு	அரூர்	
	தர்மபுரி	
	பென்னாகரம்	
தர்மபுரி மேற்கு	பாப்பிரெட்டிப்பட்டி	ஜி.செல்வம், எம்.பி., முத்துவேல் ராமசாமி
	பாலக்கோடு	
திருவண்ணாமலை தெற்கு	கலசப்பாக்கம்	
	கீழ்பெண்ணாத்தூர்	
	செங்கம்	
	திருவண்ணாமலை	
திருவண்ணாமலை வடக்கு	ஆரணி	
	செய்யாறு	
	போளூர்	
	வந்தவாசி	
அரியலூர்	அரியலூர்	இரா.கிரிராஜன், எம்.பி., ப.அப்துல் மாலிக்
	ஜெயங்கொண்டம்	
கடலூர் மேற்கு	திட்டக்குடி	
	நெய்வேலி	
	பண்ருட்டி	
	விருத்தாச்சலம்	
திருச்சி மத்திய	இலால்குடி	
	திருச்சிராப்பள்ளி (மேற்கு)	
	திருவரங்கம்	
திருச்சி தெற்கு	திருச்சிராப்பள்ளி (கிழக்கு)	
	திருவெறும்பூர்	
	மணப்பாறை	
பெரம்பலூர்	குன்னம்	
	பெரம்பலூர்	
கன்னியாகுமரி கிழக்கு	கன்னியாகுமரி	சுபா. சந்திரசேகர் டாக்டர் யாழினி
	குளச்சல்	
	நாகர்கோவில்	
கன்னியாகுமரி மேற்கு	கிள்ளியூர்	
	பத்மநாபபுரம்	
	விளவங்கோடு	
திருநெல்வேலி கிழக்கு	இராதாபுரம்	
	நாங்குநேரி	
திருநெல்வேலி மத்திய	திருநெல்வேலி	
	பாளையங்கோட்டை	
திருநெல்வேலி மேற்கு	அம்பாசமுத்திரம்	
	ஆலங்குளம்	
கரூர்	அரவக்குறிச்சி	டாக்டர் ஆர்.கோகுல் இன்பா ஏ.என். ரகு
	கரூர்	
	கிருஷ்ணராயபுரம்	
	குளித்தலை	
திண்டுக்கல் கிழக்கு	ஆத்தூர்	
	திண்டுக்கல்	
	நிலக்கோட்டை	
	பழனி	
திருச்சி வடக்கு	துறையூர்	
	மணச்சநல்லூர்	
	முசிறி	
புதுக்கோட்டை வடக்கு	கந்தர்வக்கோட்டை	
	புதுக்கோட்டை	
	விராலிமலை	
சிவகங்கை	காரைக்குடி	எஸ். ஜோயல் டாக்டர் எ.வ.வே.கம்பன்
	சிவகங்கை	
	திருப்பத்தூர்	
	மானாமதுரை	
புதுக்கோட்டை தெற்கு	அறந்தாங்கி	
	ஆலங்குடி	
	திருமயம்	
மதுரை மாநகர்	மதுரை தெற்கு	
	மதுரை மத்திய	
	மதுரை வடக்கு	
மதுரை வடக்கு	சோழவந்தான்	
	மதுரை கிழக்கு	
	மதுரை மேற்கு	
	மேலூர்	
தஞ்சாவூர் தெற்கு	பட்டுக்கோட்டை	திருமதி மாலதி நாகராஜ் சி.ஆனந்தகுமார் (இளைஞரணி)
	பேராவூரணி	
தஞ்சாவூர் மத்திய	ஒரத்தநாடு	
	தஞ்சாவூர்	
	திருவையாறு	
தஞ்சாவூர் வடக்கு	கும்பகோணம்	
	திருவிடைமருதூர்	
	பாபநாசம்	
திருவாரூர்	திருத்துறைப்பூண்டி	
	திருவாரூர்	
	நன்னிலம்	
	மன்னார்குடி	
திருப்பூர் கிழக்கு	காங்கேயம்	ப. தாயகம் கவி என். மருது கணேஷ்
	தாராபுரம்	
திருப்பூர் தெற்கு	உடுமலைப்பேட்டை	
	மடத்துக்குளம்	
திருப்பூர் மத்திய	திருப்பூர் (தெற்கு)	
	பல்லடம்	
திருப்பூர் வடக்கு	அவினாசி	
	திருப்பூர் (வடக்கு)	
நீலகிரி	உதகமண்டலம்	
	குன்னூர்	
	கூடலூர்	
இராணிப்பேட்டை	அரக்கோணம்	கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எம்.பி., இ.பரந்தாமன்
	ஆற்காடு	
	இராணிப்பேட்டை	
	சோளிங்கர்	
திருப்பத்தூர்	ஆம்பூர்	
	திருப்பத்தூர்	
	வாணியம்பாடி	
	ஜோலார்பேட்டை	
வேலூர் தெற்கு	அணைக்கட்டு	
	குடியாத்தம்	
	வேலூர்	
வேலூர் வடக்கு	காட்பாடி	
	கீழ்வைதினாங்குப்பம்(தனி)	
கோவை தெற்கு	கிணத்துக்கடவு	பரிதி இளம்சுருதி ஜி.பி. ராஜா
	சூலூர்	
	பொள்ளாச்சி	
	வால்பாறை	
கோவை மாநகர்	கோயம்புத்தூர் (தெற்கு)	
	கோயம்புத்தூர் (வடக்கு)	
	சிங்காநல்லூர்	
கோவை வடக்கு	கவுண்டம்பாளையம்	
	தொண்டாமுத்தூர்	
	மேட்டுப்பாளையம்	
திண்டுக்கல் மேற்கு	ஒட்டன்சத்திரம்	
	நத்தம்	
	வேடசந்தூர்	
கள்ளக்குறிச்சி தெற்கு	கள்ளக்குறிச்சி	வழக்கறிஞர் ரவீந்திரன் திருமதி ஜெ.வீரமணி (மாணவரணி)
	ரிஷிவந்தியம்	
கள்ளக்குறிச்சி வடக்கு	உளுந்தூர்பேட்டை	
	சங்கராபுரம்	
விழுப்புரம் தெற்கு	திருக்கோவிலூர்	
	விக்கிரவாண்டி	
விழுப்புரம் மத்திய	வானூர்	
	விழுப்புரம்	
விழுப்புரம் வடக்கு	செஞ்சி	
	திண்டிவனம்	
	மயிலம்	
தேனி தெற்கு	ஆண்டிபட்டி	டாக்டர் அஞ்சுகம் பூபதி க. பிரபு கஜேந்திரன்
	கம்பம்	
தேனி வடக்கு	பெரியகுளம்	
	போடிநாயக்கனூர்	
மதுரை தெற்கு	உசிலம்பட்டி	
	திருப்பரங்குன்றம்	
	திருமங்கலம்	
விருதுநகர் தெற்கு	அருப்புக்கோட்டை	
	சாத்தூர்	
	திருவில்லிபுத்தூர்	
	ராஜபாளையம்	
விருதுநகர் வடக்கு	சிவகாசி	
	திருச்சுழி	
	விருதுநகர்	
காஞ்சிபுரம் தெற்கு	உத்திரமேரூர்	ஹெலன் டேவிட்சன் கே. இளமகிழன்
	காஞ்சிபுரம்	
	செய்யூர்	
	மதுராந்தகம்	
காஞ்சிபுரம் வடக்கு	ஆலந்தூர்	
	செங்கல்பட்டு	
	தாம்பரம்	
	திருப்பெரும்புதூர்	
	திருப்போரூர்	
	பல்லாவரம்	
சென்னை தென்மேற்கு	தியாகராயநகர்	
	மயிலாப்பூர்	

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் 16.5.2026 அன்று காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில், கள ஆய்வுக்குழுவினருக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14-05-2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.